# வுழூ

முஸ்லிம்களாகிய நாங்கள் தொழுவதற்கு முன்னரும், குர்ஆன் ஓதுதல் போன்ற நற்கருமங்களைச் செய்ய முன்னரும் எம்மைச் சுத்தப்படுத்திக் கொள்கின்றோம். இதனை நாம் வுழூ என்கிறோம். வுழூவின் பர்ளுகளையும் அதனை முறிக்கும் காரியங்களையும் அறிந்து கொள்வோம்.

நாம் வுழூச் செய்யும்போது கட்டாயமாக நிறைவேற்ற வேண்டியவை வுழூவின் பர்ளுகளாகும். அவற்றுள் ஏதேனும் ஒன்றை நிறைவேற்றாது விட்டால் வுழூ நிறைவேறாது.

## வுழூவின் பர்ளுகள்

1. நிய்யத் வைத்தல். "அல்லாஹ்வுக்காக வுழூவுடைய பர்ளை நிறைவேற்றுகின்றேன்" என்று மனதால் நினைத்தல்.
2. முகத்தை முழுமையாகக் கழுவுதல்.
3. இரு கைகளையும் முழங்கை உட்படக் கழுவுதல்.
4. தலையில் சிறு பகுதியையாவது தண்ணீரால் தடவுதல்.
5. கரண்டைக்கால் உட்பட இரு கால்களையும் கழுவுதல்.
6. இவ்வொழுங்கின்படி செய்தல்.

சில செயல்கள் வுழூவை முறிக்கும். வுழூவை முறிக்கக்கூடிய செயல்கள் . 'முப்திலாத்' என்று சொல்லப்

படும். அவற்றுள் முக்கியமானவற்றை நீங்கள் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

## முப்திலாத்

* மலசலம் கழித்தல்.
* சுய அறிவு நீங்குதல்; போதை, பைத்தியம், மயக்கம், போன்றவற்றால் சுயஅறிவை இழத்தல்.
* திரையின்றி உள்ளங்கையால் மர்மஸ்தானத்தைத் தொடுதல்.
* விவாகம் முடிக்கத் தடையில்லாத ஆண் பெண்களின் உடல், உறுப்புக்கள் திரையின்றிபடுதல்.
* காற்று வெளியேறுதல்.

வுழூவை முறிக்கக்கூடிய இந்தச் செயல்களில் ஏதாவது ஒன்று நடந்தால் வுழூ முறிந்துவிடும். வுழூ முறிந்தால் நாம் மீண்டும் வுழூச் செய்து கொள்ள வேண்டும்.

நாம் எப்போதும் வுழூவுடன் இருப்பது நல்ல பழக்கமாகும். அதற்காக எமக்கு நன்மை கிடைத்துக் கொண்டே இருக்கும்.

**வுழூவுடன் இருப்போம்; உயர்வினைப் பெறுவோம்.**

## பயிற்சி

### தொடர்புபடுத்துங்கள்.

| | |
|---|---|
| 1. பர்ளு என்றால் | (அ) வுழூ நிறைவேறாது. |
| 2. மனதால் நினைப்பது | (ஆ) வுழூ முறிந்துவிடும். |
| 3. வுழூவின் பர்ளுகளில் ஒன்றை விட்டால் | (இ) கட்டாயம் செய்ய வேண்டிய விடயமாகும். |
| 4. மயக்கம் ஏற்பட்டால் | (ஈ) நிய்யத் என்று சொல்லப்படும். |
| 5. வுழூவை முறிக்கும் காரியங்கள் | (உ) வுழூவின் இரண்டாவது பர்ளாகும். |
| 6. முகத்தை முழுமையாகக் கழுவுவது | (ஊ) முப்திலாத் எனப்படும். |